

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | செப்டம்பர் 05, 2019 | புரட்சி 18 | முழக்கம் 34 | விலை: ரூ.3.00

## அரசியல் விநாயகனுக்கு மாற்றாக புத்தர் சிலை ஊர்வலம்

இந்து முன்னணி அமைப்பாளர் கே. பக்தவத்சலம், சென்னை இந்து முன்னணி தலைமை அலுவலகத்திலிருந்து அளித்த பேட்டியில், 'இந்த ஆண்டு விநாயகன் சிலை ஊர்வலம், அரசியல் முழக்கத்தை முன் வைத்து நடத்தப்படுகிறது' என்று கூறியிருக்கிறார்.

"பக்தி இலக்கியத்தை பரப்புவோம்; போலி தமிழ் தேசியத்தை வீழ்த்துவோம்" - இதுதான் தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள விநாயகன் சிலைகளின் ஊர்வலங்களுக்கான முழக்கமாம்.

(The theme for this year is 'Promote divine Tamil and Crack down on fake Tamil identity. - The Hindu Aug.29, 2019)

இவர்கள் வீழ்த்தப்போவது தமிழ் தேசியத்தையா அல்லது போலி தமிழ் தேசியத்தையா என்பது இங்கே பிரச்சினையல்ல.

இந்த ஊர்வலம் மதத்துக்கான ஊர்வலம் அல்ல; அரசியல் ஊர்வலம். அதுவும் பா.ஜ.க.வின் அரசியலுக்காக ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளுக்காக நடத்தப்படும் ஊர்வலம்.



ஏதோ 'விநாயக சதுர்த்தி'க்கான மத ஊர்வலம் போலவும், மத ஊர்வலங்கள் நடத்துவதற்கான உரிமைகளை சட்டப்படி மறுக்க முடியாது என்பது போலவும் தமிழக அரசும், காவல் துறையும் இதற்கு அனுமதி வழங்குகிறது.

பதட்டங்களை உருவாக்கிவரும் இந்த ஊர்வலங்களை ஒழுங்குபடுத்த கடந்த பல ஆண்டுகளாக காவல் துறை விதித்த கட்டுப்பாடுகளும் இப்போது காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன. நிறுவப்படும் விநாயகன் சிலை ஒவ்வொன்றுக்கும் காவல்துறை, தீயணைப்புத் துறை, மின்சாரத் துறை, பசுமைத் தீர்ப்பாயத்திடமிருந்து உரிய அனுமதி பெற வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை காவல்துறையே நீர்த்துப் போகச் செய்து விட்டது. இந்த அனுமதிகளை காவல்துறையே பல்வேறு துறைகளிடம் பேசி சிலைகளை நிறுவ விரும்புவோரிடம் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தியிருக்கிறது.

'நாங்கள் நடத்துவது அரசியல் ஊர்வலம் தான்' என்று வெளிப்படையாக அறிவித்த பிறகும் காவல்துறை, அதற்கு ஓடோடி உதவி செய்ய முன் வரலாமா?

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து இந்த அரசியல் ஊர்வலத்துக்கு எதிர் வினையாக பெரியார் கைத்தடி ஊர்வலங்களை நடத்தி வந்தது.

இந்த ஆண்டு மக்களை பிளவுப்படுத்தும் வேத மதம் முன்னிறுத்தும் விநாயகன் சிலை அரசியல் ஊர்வலத்துக்கு மாற்றாக - மக்கள் சமத்துவத்துக்கான மார்க்கத்தை நிறுவிய புத்தரின் சிலையை முன் வைத்து ஊர்வலம் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

# கடும் பொருளாதார சரிவு

நாட்டின் தயாரிப்பு துறை உற்பத்தி வளர்ச்சி 15 மாதங்களில் இல்லாத வகையில், சரிவை சந்தித்துள்ளது. விற்பனை, உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் மந்த நிலையால், நாட்டின் தயாரிப்பு துறை உற்பத்தி வளர்ச்சி, சரிவை சந்தித்துள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த, 'ஐ.எச்.எஸ்., மார்கிட்' எனும் நிறுவனம், உலோகம், இரசாயனம், காகிதம், உணவு, ஜவுளி உள்ளிட்ட எட்டு பிரிவுகளைச் சேர்ந்த நிறுவனங்களின், ஆகஸ்ட் மாத தயாரிப்பு நிலவரம் குறித்து ஆய்வு நடத்தி, அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

ஆகஸ்ட் மாதத்தில், தயாரிப்பு துறையின் உற்பத்தி வளர்ச்சி குறித்த, பி.எம்.ஐ., குறியீடு, 51.4 புள்ளிகளாக சரிந்துள்ளது. இது, 2018, மே மாதத்துக்குப் பிறகு ஏற்பட்ட குறைந்த அளவாகும். 2018, மே மாதத்தில், தயாரிப்பு துறையின் உற்பத்தி வளர்ச்சி, 52.5 புள்ளிகளாக இருந்தது. கடந்த ஜூலை மாதம் முதலாகவே, பெரும்பாலான அளவீட்டுக்கான குறிகாட்டிகள் வீழ்ச்சியடைந்ததால், உற்பத்தி வளர்ச்சி, தன் வேகத்தை இழந்துள்ளது.

ஆகஸ்ட் மாதத்தில் உற்பத்தி, வேலைவாய்ப்பு, புதிய ஆர்டர்கள் ஆகிய முக்கியமான, பி.எம்.ஐ., குறியீடுகள் சரிவடைந்து உள்ளன. நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், ஜூன் மாதத்துடன் முடிவடைந்த முதலாவது காலாண்டில், ஆறு ஆண்டுகளில் இல்லாத வகையில், 5 சதவீதமாக சரிவை கண்டுள்ளது. ஆகஸ்ட் மாதத்தில், 15 மாதங்களில் இல்லாத வகையில் விற்பனை வளர்ச்சியும் குறைந்துள்ளது. மேலும், உற்பத்தி வளர்ச்சியும், வேலைவாய்ப்பு உருவாக்கமும் குறைந்துள்ளது.

இவை எல்லாவற்றையும் விட, 2018 மே மாதத்துக்குப் பிறகு முதல் முறையாக, ஆகஸ்ட் மாதத்தில் தொழிற்சாலைகள், உற்பத்திக்கு தேவையான உள்ளீட்டு பொருட்களை வாங்குவதும் குறைந்துள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கான விற்பனை குறைந்தது மட்டுமின்றி, போதுமான நிதி கிடைப்பதிலும் சிக்கல்கள் இருந்துள்ளது, ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

**முன்னணி வாகன துறை நிறுவனங்கள் வீழ்ச்சி**

ஆகஸ்ட் மாதத்தில், வாகன விற்பனை சரிந்துள்ளது. நாட்டின் பெரிய வாகன தயாரிப்பு நிறுவனங்கள், விற்பனையில் சரிவை கண்டுள்ளன. முன்னணி வாகன தயாரிப்பு நிறுவனங்களான, 'மாருதி சுசூகி, ஹூண்டாய், மகிந்திரா அண்டு மகிந்திரா, டாடா மோட்டார்ஸ், ஹோண்டா' உள்ளிட்ட நிறுவனங்கள், கடந்த ஆகஸ்ட் மாதத்தில், இரட்டை இலக்க விற்பனை சரிவை கண்டுள்ளன. மாருதி சுசூகி நிறுவனம், 32.7 சதவீதம் அளவுக்கு விற்பனையில் சரிவை கண்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், இந்நிறுவனம், 1.58 லட்சம் வாகனங்களை விற்பனை செய்திருந்த நிலையில், நடப்பு ஆண்டு ஆகஸ்டில், 1.06 லட்சம் வாகனங்களை மட்டுமே விற்பனை செய்துள்ளது. இதே போல் டாடா மோட்டார்ஸ் நிறுவனமும், 58 சதவீதம் அளவுக்கு சரிவை கண்டுள்ளது. ஹோண்டா கார்ஸ் இந்தியா மற்றும் டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் ஆகிய நிறுவனங்களின் விற்பனையும் முறையே, 51 சதவீதம் மற்றும் 21 சதவீதம் சரிவை சந்தித்துஉள்ளன.

"சந்தை நிலைமை, தொடர்ந்து சவாலாகவே இருந்து வருகிறது. இருப்பினும், நிறுவனம், சில்லரை விற்பனையில் அதிக கவனம் செலுத்துகிறது" என, விற்பனை நிலை குறித்து, டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின், பயணியர் வாகன வணிகத்தின் தலைவர், மயாங் பரீக் தெரிவித்து உள்ளார்.

மாருதி சுசூகி நிறுவனம், ஆகஸ்ட் மாதத்தில், 32.7 சதவீதம் அளவுக்கு விற்பனை சரிவை சந்தித்திருக்கிறது. உள்நாட்டு விற்பனை, 34.3 சதவீதம் அளவுக்கு குறைந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளது. மகிந்திரா அண்டு மகிந்திராவின், உள்நாட்டு விற்பனை, 26 சதவீதம் அளவுக்கு சரிந்துவிட்டது. இந்நிறுவனத்தின் பயணியர் வாகன விற்பனை, 32 சதவீத சரிவை கண்டுள்ளது. வர்த்தக வாகன பிரிவும், 28 சதவீத சரிவை சந்தித்துள்ளது.

**முக்கிய எட்டு துறைகள் :** நாட்டின், முக்கிய எட்டு தொழில் துறைகளின் வளர்ச்சி, கடந்த ஜூலை மாதத்தில், 2.1 சதவீதமாக குறைந்துள்ளது என்று நடுவண் அரசே ஒப்புக் கொள்கிறது. இதுவே, கடந்த ஆண்டு, ஜூலையில் 7.3 சதவீதமாக இருந்தது.

இந்திய நிறுவனங்கள் வெளிநாடுகளில் திரட்டிய கடன், கடந்த ஜூலை மாதத்தில் 35,850 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

'கோல் இந்தியா' நிறுவனத்தின் உற்பத்தி, ஆகஸ்ட் மாதத்தில், 10.3 சதவீதம் அளவுக்கு சரிந்து, 34.77 மில்லியன் டன் ஆக குறைந்துள்ளது.

பொதுத் துறை உருக்கு தயாரிப்பு நிறுவனமான, 'செய்ல்' அதன் இரண்டு துணை நிறுவனங்கள் சரியாக செயல்படாததால் அவற்றை மூடிவிட முடிவு செய்துள்ளது. ●

## பரப்புரைப் பயணம் மீண்டும் செப். 17இல் தொடங்குகிறது

ஆகஸ்ட் 25ஆம் தேதி திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கிய 'மண்ணின் மைந்தர்களின் உரிமை முழக்கப் பரப்புரைப் பயண'த்துக்கு தமிழகம் முழுதும் காவல் துறை வழங்கிய அனுமதியை திடீரென மறுத்தது. வேதாரண்யம் அம்பேத்கர் சிலை உடைப்பு, தமிழ்நாட்டில் தீவிரவாதிகள் ஊடுறுவல் ஆகிய பிரச்சினைகளை காவல்துறை காரணமாகக் கூறியது. அதைத் தொடர்ந்து கழகத்தின் பரப்புரைப் பயணம் தள்ளி வைக்கப்பட்டது.

எதிர்வரும் செப்டம்பர் 17ஆம் தேதி பெரியார் பிறந்த நாளில் மீண்டும் பரப்புரைப் பயணம் ஏற்கனவே திட்டமிட்டபடி தொடங்குகிறது. செப். 20இல் நாமக்கல் பள்ளிப் பாளையத்தில் நிறைவு விழா மாநாடு நடைபெறும். காவல்துறைக்கு அனுமதி கோரி மனு அளிக்கப்பட்டுள்ளது. தோழர்களே, தயாராவீர்!

# இதுதான் மத ஊர்வலமா? இந்து முன்னணியே பதில் சொல்!

**‘மதம் அன்பைப் போதிக்கிறது; இந்து மதம் போல் சகிப்புத்தன்மையுள்ள வேறு மதம் இல்லை’ என்று பார்ப்பனர்களும் பார்ப்பனியர்களும் ‘வாய்கிழிய’ப் பேசுகிறார்கள். ஆனால் மதத்தின் பெயரால் நடக்கும் விநாயகன் சிலை ஊர்வலங்கள் எப்படி நடக்கின்றன? ஒரே நாளில் ஏடுகளில் வெளி வந்த சில செய்திகளைத் தொகுத்து தருகிறோம்.**

“அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் இருக்க தமிழகம் முழுதும் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகளுக்கு ஒரு இலட்சம் போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் மட்டும் 10,000 போலீசார் இந்தப் பணியில் உள்ளனர். அதிலும் சிலைக்கு ஒரு போலீசார் என்று 24 மணி நேரமும் ‘ஷிப்டு’ முறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.” - ‘தினத்தந்தி’, செப். 3

“ஆவடியை அடுத்த திருமுல்லைவாயிலில் அனுமதியின்றி 5 அடி உயர விநாயகன் சிலை நிறுவப்பட்டிருந்தது. போலீசார் அந்த விநாயகர் சிலையை அகற்றினர். உடனே இந்து முன்னணி மாநில செயலாளர் பரமேசுவரன் தலைமையில் இந்து முன்னணியினர் மீண்டும் சிலையை அதே இடத்தில் வைக்க வேண்டும் என்று சி.டி.எச். சாலையில் மறியல் செய்தனர். செய்தி அறிந்து போலீசார் விரைந்து வந்து 28 இந்து முன்னணி பொறுப்பாளர்களை கைது செய்தனர். பிறகு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.” - ‘தினத்தந்தி’ செப். 3

“திண்டுக்கல் பாறைப்பட்டியில் உள்ள காளியம்மன் கோயிலில் விநாயகர் சிலை ‘பிரதிஷ்டை’ செய்ய இந்து முன்னணியினர் அனுமதி கேட்டனர். காவல்துறை அனுமதி தரவில்லை. ஆனால் தடையை மீறி இந்து முன்னணி ‘பிரதிஷ்டை’ செய்ததால் சிலையை போலீசார் பறிமுதல் செய்தனர். இதைக் கண்டித்து இந்து முன்னணியினர் மற்றொரு விநாயகர் சிலையை ‘பிரதிஷ்டை’ செய்ய ஊர்வலமாக வந்தனர். 40 பேர் கைது செய்யப்பட்டனர். மாலை அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.” - ‘தினத்தந்தி’ செப். 3

“தஞ்சையில் நிர்மலா நகர் பகுதியில் புறம்போக்கு இடத்தை ஆக்கிரமிப்பதில் இரு ஜாதிப் பிரிவினருக்கு இடையே மோதல் நீடித்து வருகிறது. இதேபோல் கீழ வாசல், வண்ணாந்துறை பகுதிகளிலும் இரு ஜாதியினருக்கும் இடையே பிரச்சினை இருந்து வருகிறது. விநாயகன் சிலைகளை நிறுவி, இடங்களை ஆக்கிரமிக்கும் முயற்சிகள் நடப்பதை அறிந்த காவல்துறை, இந்தப் பகுதிகளில் சிலை நிறுவ அனுமதிக்கவில்லை. தடையை மீறி இந்து முன்னணி மாநகரத் தலைவர் பாலமுருகன் என்பவர் தலைமையில் சிலையை நிறுவ நிர்வாகிகள் வந்தபோது போலீசார் கைது செய்தனர். வண்ணாந்துறை பகுதியிலும் இதேபோல் தடையை மீறி சிலை வைக்க வந்த இந்து முன்னணியினர் கைது செய்யப்பட்டனர்.” - ‘தினத்தந்தி’ செப். 3

“கடலூர் மாவட்டம் பண்ருட்டி பகுதியில் விநாயகர் சிலை ஊர்வலம் நடந்தது. மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர்கள் தங்கள் தெரு வழியாக ஊர்வலம் வர எதிர்த்தனர். ஊர்வலத்தில் வந்தவர்கள் மாரியம்மன் தெருவில் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த விநாயகன் சிலையை திடீரென உடைத்தனர். இரு தரப்பினருக்கும் கோஷ்டி மோதல் ஏற்பட்டு தாக்கிக் கொண்டனர். போலீசார் 10 பேரை பிடித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.” - ‘தினத்தந்தி’ செப். 3

அரக்கோணம் அருகே உள்ள மோசூர் கிராமத்தில் விநாயகன் சிலையை மாட்டுவண்டியில் வைத்து ஜெனரேட்டர் மூலம் மின் விளக்கு அலங்காரம் செய்து ஊர்வலமாக வந்தபோது 10ஆம் வகுப்பு படிக்கும் சிவராமன் எனும் 17 வயது மாணவன், சிலைக்கு மாலை அணிவித்தபோது மின் விளக்கு கசிந்து மின்சாரம் தாக்கி இறந்தான். - ‘தினத்தந்தி’ செப். 3

புதுக்கோட்டை மாவட்டம் பெருமாள்பட்டி கிராமத்தில் விநாயகர் சிலையை நிறுவிய ‘இந்து முன்னணி’யினர் ஒரு பள்ளி மாணவனை மின் கம்பத்தில் ஏற வைத்து திருட்டுத்தனமாக மின்சாரம் எடுக்க ஏற்பாடு செய்தனர். இதைப் பார்த்த சமூக ஆர்வலர்கள் அதிர்ச்சியடைந்து மாணவனை பத்திரமாக கீழே இறக்கி விட்டனர்.” ‘தினமலர்’ செய்தி

இவை அனைத்தும் ஒரே நாளில் நடந்த சம்பவங்கள்.

‘சேரி’ விநாயகன், ஊர்த் தெருவுக்குள் நுழைய முடியவில்லை. இதற்குப் பெயர் ‘இந்து ஒற்றுமை’யாம்.

இரு பிரிவு ‘இந்து’க்கள் மோதிக் கொண்டு விநாயகன் சிலையை உடைக்கிறார்கள்; கேட்டால் மத ஊர்வலமாம்!

புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிக்க ‘விநாயகன்’ சிலையை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள்.

கேட்டால் இதுதான் ‘சகிப்புத் தன்மை’ என்கிறார்கள்.

இந்த கூத்துகளுக்குப் பெயர்தான் மத ஊர்வலமா? இந்து முன்னணியே, பதில் சொல்!

# கடவுள் – மத மறுப்பாளர் நேரு முன்மொழிந்த ‘அறிவியல் மனித நேயம்’



**ஆக. 31, 2019 ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஏட்டில் நேருவின் பகுத்தறிவு கொள்கை பற்றி அசோக் வோஹ்ரா எழுதிய கட்டுரையின் சுருக்கமான தமிழ் வடிவம்.**

நேரு வாழ்நாள் முழுதும்தீவிர பகுத்தறிவாளராகவே இருந்தார். கடவுள் பற்றிய கருத்தே அறிவுடைமைக்கு எதிரானது என்று கூறிய அவர், இதுதான் கடவுள் என்பதற்கான வரையறையே இல்லை என்றார். தன்னுடைய ‘டிஸ்கவரி ஆப் இந்தியா’ நூலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“ஒரு கடவுள் உருவமாகவோ அல்லது ஏதோ ஒரு புலப்படாத ஒரு அற்புத சக்தியாகவோ இருப்பதாக என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடிவதில்லை. மனித சமூக வளர்ச்சி பற்றிய மானுடவியலில் அத்தகைய கடவுளுக்கோ, அற்புத சக்திக்கோ இடமில்லை. ஆனாலும் பலரும் இந்த சக்திகளை நம்புவது எனக்கு வியப்பூட்டுகிறது. தங்களுக்கான தனிப்பட்ட கடவுள் நம்பிக்கைக் குறித்த எந்த கருத்தையும் என்னால் ஏற்கவே முடியாது” என்று எழுதியிருக்கிறார். “இல்லாத ஒரு கடவுள்தான் மனிதனை வழி நடத்தி உள்ளத்தை அமைதிப்படுத்துகிறார் என்பதை எப்படி ஏற்க முடியும்” என்று அவர் கேட்டார். ‘கடவுள் என்ற ஒன்று மனித சமுதாயத்துக்கு தேவை’ என்ற வாதத்தையும் நேரு ஏற்கவில்லை.

“அப்படியே கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்பதை ஒப்புக் கொண்டாலும் கடவுளிடம் போய் பக்தி செலுத்தாமலும், அவரை சார்ந்து இல்லாமல் இருப்பதுமே விரும்பத்தக்கது. நம்மையும் மீறிய அதீத சக்தி ஒன்றை நம்பிக் கொண்டிருப்பது, ஒருமனிதரின் தன்னம்பிக்கையை குலைத்து விடும். தன்னம்பிக்கை குலையும்போது மனிதனின் ஆற்றலையும் சிந்தனைத் திறனையும் பாதிக்கச் செய்து விடுகிறது. இயற்கையின் தடைகளைத் தாண்டி மனித சமூகம் முன்னேறிச் செல்வதற்கு அறிவியல் சார்ந்த மனித நேயமே தேவை (Scientific Humanism). அதுவே நடைமுறைக்குப் பொருந்தக் கூடியது; இயல்பானது. மனித வாழ்க்கையில் ஒழுக்கத்தையும் சமூக உணர்வையும் உருவாக்கக் கூடியது. நடைமுறையோடு பொருந்தக் கூடிய இந்த அறிவியல் மனித நேயக் கோட்பாடுதான் சமூக மேம்பாட்டுக்கு பயன்படக் கூடியதும் ஆகும். ‘அறிவியல் மனித நேயம்’ என்ற நெறிக்கு கடவுள், ‘மனிதம்’ தான்; சமூக சேவைதான் அதற்கான மதம். ஒவ்வொரு தலைமுறையில் வாழும் ஒவ்வொருவரும் ஒரு மாயையில் மூழ்கி இருக்கிறார்கள். அதாவது எல்லாவற்றையும் நாம் சரியாகவே புரிந்து வைத்திருக்கிறோம் என்ற மாயையில் மூழ்கி விடுகிறார்கள். நம்முடைய நம்பிக்கைதான் நமக்கு வாழ்க்கை. அதுதான் நம்மை நல்வழியில் செலுத்தும். இதுவே நிலையானது என்பதே ஒரு மாயைதான். ‘அறிவியல் மனித நேயம்’ இந்தக் கருத்துகளை மறுக்கிறது.

இன்றைய கலாச்சார மதிப்பீடுகளாக நாம் போற்றுவது அப்படியே நிலையானதும் இறுதியானதும் அல்ல. அந்தந்த காலத்தில் நாம் போற்றும் கலாச்சாரமும் அதன் மதிப்பீடுகளும் சமூகத்துக்கு அவசியமானவைதான். ஆனாலும் அதுவே எல்லா காலத்துக்குமானது அல்ல. அதுவே நான் கூறும் பகுத்தறிவு சிந்தனையின் அடிப்படையாகும். மனிதன் தன்னுடைய எல்லையில்லாத திறமையை வெற்றியை நோக்கிச் செல்லும் போராட்டத்துக்குப் பயன்படுத்த வேண்டும். மனிதன் தனது அறிவையும் ஆற்றலையும் முழுமையாகப் பயன்படுத்தும் போதுதான் மேலும் மேலும் முன்னேறிச் செல்ல முடியும்; தடைகளை எதிர்த்து நிற்க முடியும். கடவுள் மத நம்பிக்கைகள் இதற்கு தடையாகவே இருக்கும்.

சக மனிதர்களை நேசிப்பதும் சுயநலத்தை மறுக்கும் துணிவும் மனிதனின் மிகச் சிறப்பான குணாம்சங்கள். நகைச்சுவை உணர்வு மனிதர்களுக்கு மட்டுமே உரிய சிறப்பு. இடர்ப்பாடுகளை சந்திப்பதற்கு அறிவியல் அடிப்படையிலான மனித நேயம் கொண்ட சிந்தனைகளான பகுத்தறிவே பயன்படும். வளர்ச்சியை நோக்கிய பயணம் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும்; தேங்கிவிடக் கூடாது” - என்பதே நேருவின் கருத்து.

# ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன அதிகார வர்க்கத்தை அரசு நிர்வாகத்தில் திணிக்கும் மோடி ஆட்சி

**தனியார் நிறுவனங்களில் பணியாற்றிய 9 பேரை, மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களில், அய்ஏஎஸ் அதிகாரிகளுக்கு இணையான அதிகாரத்தில், இணைச் செயலாளர்களாக நியமித்து மோடி அரசு உத்தரவிட்டுள்ளது.**

இவர்களுக்கு பங்களா, வாகன வசதியுடன், ஏழாவது ஊதியக்குழு பரிந்துரை அடிப்படையில் மாதத்துக்கு ஒரு லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் முதல் 2 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் வரைசம்பளமும் வழங்கப்பட உள்ளது. குடிமைப் பணித் தேர்வுகளில் (அய்ஏஎஸ், அய்பிஎஸ், அய்எப்எஸ், அய்ஆர்எஸ்) தேர்ச்சி பெற்றவர்களே, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தகுதி அடிப்படையில், மத்திய அரசின் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள் மற்றும் கூடுதல் செயலாளர்கள் பதவிகளில் நியமிக் கப்படுவது வழக்கம். அனுபவத்தின் அடிப்படையில், லேடரல் எண்ட்ரி முறையிலும் இந்த நியமனங்கள் நடக்கும் என்றாலும், தனியார் துறைகளைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள்.

வருமான வரித் துறை, கஸ்டம்ஸ், ரயில்வே, தொலைத் தொடர்பு, அஞ்சலகம் மற்றும் வணிகம் உட்பட 37 அரசுத் துறைகளில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்களே தகுதி உயர்வு வழங்கப் பட்டு, அரசின் செயலாளர்களாக நியமிக்கப்படு வார்கள். ஆனால், மோடி தலைமையிலான பாஜக அரசு, லேடரல் எண்ட்ரி முறையில், தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம்(?) பெற்றவர்களையும், மத்திய அரசின் இணைச் செயலாளர்களாக நியமிக்கப் போவ தாக கடந்த ஆண்டு அறிவித்தது. அப்போதே இதற்கு எதிர்ப்பும் எழுந்தது. அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, அரசு உயரதிகாரிகளும் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பாஜகவுக்கு வேண்டியவர்களை, அனுபவ சாலிகள் - அறிவாளிகள் என்று கூறி, அவர்களைக் கொல்லைப் புற வழியாக, அரசின் உயர்பதவிகளில் உட்கார வைக்கும் திட்டமாகவே இதுதெரிகிறது என்றும் குற்றம் சாட்டினர். ஆனால், மோடி அரசு அவற்றைக் கண்டு கொள்ளவில்லை. நிதி ஆயோக் பரிந்துரை என்ற பெயரில், யுபிஎஸ்சி மூலம் தனியாரை நியமிப்பதற்கு அறிவிக்கைகளையும் வெளியிட்டது. 40 வயதுக்கும் மேற்பட்ட, குறைந்தது 15 ஆண்டுகள் தனியார் நிறுவனங்களில் பணியாற்றி, துறை சார்ந்த அனுபவம் பெற்றவர்கள், அய்ஏஎஸ் தகுதி நிலையிலான மத்திய அரசின் இணைச் செயலாளர் பதவிகளுக்கு விண்ணப் பிக்கலாம் என்று கூறியிருந்தது.

இந்நிலையில், மத்திய வேளாண் துறையில் ககோலி கோஷ், விமானப் போக்குவரத்துத் துறையில் அமர் துபே, வணிகத்துறை யில் அருண் கோயல், பொருளாதார விவகாரத் துறையில் ராஜீவ் சக்சேனா, சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையில் சுஜித் குமார் பாஜ்பாய், நிதிச் சேவைத் துறையில் சவுரவ் மிஸ்ரா, புதுப்பிக்கத் தக்க சக்தி துறையில் தினேஷ் தயானந்த் ஜகதலே, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலை பிரிவில் சுமன் பிரசாத் சிங், கப்பல் போக்குவரத்து துறையில் பூஷன் குமார் ஆகியோரை அரசு இணைச்செயலாளர் களாக நியமித்து உத்தரவு பிறப்பித்துள்ளது. மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களில் நியமிக்கப்பட்ட இந்த 9 இணைச் செயலாளர்களும் அடுத்த 3 ஆண்டுகளுக்கோ அல்லது அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும்வரை பதவியில் இருப்பார்கள் என்று கூறப் பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலோர் பார்ப்பன உயர்ஜாதி யினர் என்பதோடு ஆர்.எஸ்.எஸ். அமைப்போடு தொடர்புடையவர்கள்.

# கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு கேள்வி

## அனைவருக்கும் கல்வி வழங்கும் உரிமையை அரசு கைவிட்டது ஏன்?

*ஜூலை 12, 2019 அன்று கோவை அண்ணாமலை அரங்கில் கோவை திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் புதிய கல்வித் திட்ட நகல் குறித்து கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு நிகழ்த்திய உரை: (சென்ற இதழ் தொடர்ச்சி)*

ஒரு பள்ளி வளாகத்திற்குள் சென்றீர்களென்றால், நீங்கள் ஒரு பள்ளியில் எவையெல்லாம் இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்களோ அவையனைத்தும் அனைத்துப் பள்ளியிலும் இருக்க வேண்டும். என் வீட்டிற்கு அருகில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது, நீங்கள் எவையெல்லாம் ஒரு பள்ளியில் இருக்க வேண்டுமென்று கூறினீர்களோ அவையனைத்தும் என் வீட்டிற்கு அருகில் உள்ள பள்ளியில் இருந்தால், நான் அதை தவிர்த்து விட்டு ஏன் வேறு பள்ளியில் சேர்க்கப் போகிறேன். உலகம் முழுக்க இருக்கக் கூடிய நடைமுறை, ஒரே சீரான பள்ளி அமைப்பு என்பதாகும் ஆனால் இந்தியாவில் 70 ஆண்டுகாலம் அதைப் பற்றி பேசுவதற்குக்கூட தயாராக இல்லையென்பது எப்படி? சரி கோத்தாரி குழுவின் கல்விக் கொள்கை 1968இல் வெளி வந்தது. அதன் பிறகு 1980 களில் இந்தியா உலக வங்கியில் கடன் வாங்க ஆரம்பித்தது. அதுவரை உலக வங்கியில் கடன் வாங்கவில்லை. அய்.எம்.எப். இடம் கடன் வாங்கவில்லை. உலக வங்கியில் கடன் வாங்கி, அய்.எம்.எப். இடம் கடன் வாங்கிய பின் தான் உருவானது 1986 கல்விக் கொள்கை. ஆனால் அதில் குறைந்தபட்ச ஜனநாயகம் இருந்தது. என்னவென்றால் நிலை அறிக்கை என்று ஒன்றை வைத்தார்கள்.

1986 கல்விக் கொள்கை உருவாவதற்கு முன் அன்றைய கல்வியின் நிலை என்ன? என்று ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கை விவாதிக்கப்பட்டுத்தான் 1986 கல்விக் கொள்கை வந்தது. வந்தப் பிறகு 1986 கல்விக் கொள்கையை எதிர்த்து கடுமையாக போராட்டம் நடத்தியிருக்கிறோம். ஏதோ 2014 முதல் 2019 வரை மட்டும் தான் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் சிலர். “மூட்டா” என்றொரு அமைப்பு இருக்கிறது. மதுரை, காரைக்குடி, அழகப்பா, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பு. அந்த ‘மூட்டா’ அமைப்பு இரண்டு ரூபாய்க்கு புத்தகம் போட்டுள்ளது. அதை வாய்ப்பிருந்தால் படித்துப் பாருங்கள்.

1986, 1991 கல்விக் கொள்கைகள் பற்றிய விமர்சனம் அது. இதே கல்விக் கொள்கைகளை விமர்சித்து, தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி என்று ஒரு அமைப்பு உள்ளது வெறும் 25 பைசாவில் ஒரு புத்தகம் போட்டுள்ளார்கள். எதற்கு அப்போது எதிர்த்தோம்? மாவட்டம்தோறும் கல்லூரிகளை திறக்கச் சொன்னால் திறந்த பல்கலை, திறந்த பள்ளிகளைத் திறக்கப் போவதாக பள்ளி, கல்லூரிகளுக்குப் போகாமலே படிக்கலாம் என்றார்கள். அப்போது கல்லூரிக்குள் நான் போய் படிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கு என்று கேட்டோம். ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள், கல்லூரிக்குள் வராமலே படியுங்கள் என்று சொல்கிறீர்கள். அது எப்படி?

1986 இல் நவோதயா என்று சொன்னார்கள். நவோதயாவை ஏன் எதிர்த்தோம்? இப்போ எல்லாரும் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தி மற்றும் சமஸ்கிருதத்திற்காக எதிர்த்தார்கள் என்கிறார்கள். அது மட்டும் தானா? வேறு எதற்காகவும் எதிர்க்கவில்லையா? 1947 க்கும் 1986 க்கும் இடையில் எத்தனை வருடம் 40 வருடம் ஆகிறதே, 40 ஆண்டுகால விடுதலை பெற்ற இந்தியா, குடியரசு பெற்ற இந்தியா, இந்த 40 ஆண்டுகாலத்தில் அத்தனை பேருக்கும் கட்டணமில்லா கல்வியை கொடுக்க வேண்டும். அது தானே சட்டப்படியான கடமை. ஆனால் 1986 கல்விக் கொள்கையில் என்ன செய்கிறார்கள்? மாவட்டத்திற்கு ஒரு பள்ளிக்கூடம் அதற்கு பெயர் நவோதயா! மாவட்டத்திற்கே ஒன்று மட்டும் தான். அதற்கு பல கோடி ரூபாய். எத்தனை பேர் பயில்வார்கள்? ஒரு பிரிவிற்கு 40 பேர் இன்னொரு பிரிவிற்கு 40 பேர் மொத்தம் 80 பேர். எதிர்த்ததற்கான காரணம் என்னவென்றால், 80 பேருக்கு உயர்தர கல்வியை கொடுக்க வேண்டுமென்பதற்காக 8 ஆயிரம் பேருக்கு தரமற்ற கல்வியை கொடுப்பீர்களா? இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 14 என்ன சொல்கிறது? சமத்துவக் கோட்பாட்டைச் சொல்லவில்லையா? எது தரமென்று கூறுகிறீர்களோ அதை எல்லோருக்கும்



பிரின்ஸ் கஜேந்திரபாபு

கொடுங்கள் சமமாக. இது தான் உயர்ந்த கல்வி என்றால், இது தான் உயர்ந்த கற்பித்தல் முறை என்றால் இந்த வசதி அடுத்த பள்ளிகளுக்கும் வேண்டாமா? இந்தக் காரணங்களுக்காத் தான் எதிர்த்தோம்.

1986 புதிய கல்விக் கொள்கை வந்த பிறகு கூட, 1991இல் ஒரு கல்விக் கொள்கை வந்த பின்பு கூட அரசின் பொறுப்பில்தான் கல்வி என்பதில் எந்த மாற்றமும் இல்லையே. குறைந்த பட்சம் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு எட்டாம் வகுப்பு வரை கல்வி கொடுக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லையே. மருத்துவக் கல்லூரியில் சேர மோகினி என்ற பெண் போட்ட வழக்கில் உச்சநீதி மன்றம் ஒரு தீர்ப்பு கொடுத்தது. என்னவென்றால் கல்வி என்பது அடிப்படை உரிமை என்று தீர்ப்பு வழங்கியது. உச்சநீதிமன்றம், பிரிவு 14 , பிரிவு 21, பிரிவு 41, பிரிவு 45 இதையெல்லாம் விவாதிக்கிறது. அரசியல் சட்டத்தின் வழிகாட்டும் நெறிகளில் இருக்காமல் இனி அடிப்படை உரிமை என்ற பிரிவில் கல்வி வருகிறது என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது.

பெற்றோர் அல்லது பாதுகாவலருடைய கடமை என்ன? கல்வியைக் கொடுப்பது. இந்தியா விடுதலை கிடைத்த போதே 1947 ஆகஸ்டு 15 இல் இந்தியா எத்தகைய வறுமையில் இருந்தது. அப்போது அரசமைப்பில் என்ன எழுதினார்கள்? கல்வி வழங்குவது அரசின் கடமை என்று எழுதினார்கள். ஆனால் 2002 இல் அப்போது அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமை யிலான அரசு, பேராசிரியர் முரளி மனோகர் ஜோஷி தான் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர், அதில், அரசின் கடமையாக இருந்த கல்வியை, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கடமையாக திருத்தப்பட்டது. 2002இல் விதை போட்டால் அது 2019இல் அது மரமாக வருமல்லவா! அப்போது 2002இல் போட்ட விதை தான் இப்போது புதிய கல்வித் திட்டமாக வந்திருக்கிறது.

(தொடரும்)

# அய்.நா. பொதுச் செயலாளருக்கு மனு சிறிலங்காவை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் முன்நிறுத்துக!




“சிறிலங்காவைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பு நிறுத்த வேண்டும். ஆகஸ்ட் - 30 அனைத்துலக காணாமல் ஆக்கப் பட்டோர் நாளில் ஈழத் தமிழர் ஆதரவு அமைப்புகள் ஐ.நா. வுக்கு கோரிக்கை

ஆகஸ்ட் 30 காணாமல் போனோர் நாளை முன்னிட்டு சென்னை கொட்டிவாக்கத்தில் உள்ள யுனிசெப் அலுவலகத்தில் காலை 11 மணி அளவில் ஈழத்தில் வலிந்து காணாமலடிக்கப்பட்ட ஈழத் தமிழருக்கு நீதிக்கோரி ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாக ஐநா. பொதுச் செயலருக்கும் ஐநா மனித உரிமை ஆணையருக்கும் விண்ணப்ப மடல் கொடுக்கப்பட்டது.

இந்த விண்ணப்ப மடலை வழங்கிய குழுவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் தியாகு, தமிழ்த்தேச மக்கள் முன்னணி கண்ணன், இளந்தமிழகம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில், தடயவியல் நிபுணரும் மருத்துவருமான சேவியர், பேராசிரியர் பேச்சிமுத்து ஆகியோர் பங்குபெற்றனர். யுனிசெப் அலுவலக அதிகாரியிடம் சிறிலங்கா அரசப் படையால் காணாமலடிக்கப்பட்ட இருபதாயிரத்தாயிரத்திற்கும் மேலான தமிழர்களின் நிலை என்ன என்பது போர் முடிந்து பத்தாண்டுகள் ஆகியும் தெரியவில்லை. காணாமலடிக்கப்பட்டவர்கள் நிரம்பிய நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கிறது. போர் முடிந்த நிலையில் சரணடைந்தவர்களும் குழந்தைகளும் கூட காணாமலடிக்கப்பட்டுள்ளனர். ஐ.நா. அறிக்கைகளில் போர்க்குற்றங்களும் மானிட விரோத குற்றங்களும் செய்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ள 58 ஆவது படைப்பிரிவின் தலைவர் சவேந்திர சில்வாவுக்கு சிறிலங்கா அரசு படைத்தலைவராகப் பதவி உயர்வு கொடுத்துள்ளது. இது பற்றி ஐ.நா. மனித உரிமை ஆணையர் மிசேல் பச்செலட் அவர்களும் கவலை தெரிவித்துள்ளார். கண் துடைப்புக்காக காணாமற்போனோர் அலுவலகங்களைத் திறந்து வைத்து உலகை ஏமாற்றிவருகிறது சிறிலங்கா. மேற்படி கருத்துகள் யுனிசெப் அலுவலக அதிகாரியிடம் எடுத்துச் சொல்லப்பட்டது.

கடந்த ஆண்டு இறுதியில் இலங்கையின் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர் தாயகப் பகுதிக்கு நேரில் சென்று வந்த மருத்துவர் சேவியர் அவர்கள் காணாமலடிக்கப்பட்டவர்களின் உறவுகளின் துயரத்தை எடுத்துச் சொன்னார். ”ஒரு தாய் தனது முதல் இரண்டு பிள்ளைகளைப் போரில் இழந்துள்ளார். அது பற்றி குறிப்பிடும்போது அவர் கலங்கவில்லை. ஆனால், தனது மூன்றாவது பிள்ளைத் தன் கண் முன்னே இராணுவத்திடம் சரணடைந்து காணாமலடிக்கப்பட்டோர் பட்டியலில் இருப்பவர் என்று சொல்லும் போதே கடகடவென கண்ணீர் விட்டு அழுதுவிட்டார்.” என்று ஓர் எளிய எடுத்துக்காட்டின் மூலம் காணாமலடிக்கப்பட்டோரின் உறவுகளின் துயரத்தை எடுத்துச் சொன்னார்.

இனியும் காலந் தாழ்த்தாது சிறிலங்கா அரசைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் முன்பு நிறுத்த வேண்டும் அல்லது சிறிலங்காவுக்கு என்று சிறப்புப் புலனாய்வுத் தீர்ப்பாயம் அமைத்து புலனாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மேலும் இக்கோரிக்கையை மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழக சட்டப்பேரவையும் இலங்கையின் வடக்கு மாகாணசபையும் ஒரு தீர்மானமாக நிறைவேற்றியுள்ளன என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

யுனிசெப் அலுவலக அதிகாரி விண்ணப்ப மடல்களைப் பெற்றுக் கொண்டு ஐ.நா.வின் இந்திய அலுவலகத்திற்கு முன் அனுப்புவதாக கூறினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகப் பரப்புரைப் பயண விளக்கக் கூட்டங்கள்


வேட்டைக் காரன் புதூ


காஞ்சிபுரம்


இராயக்கோட்டை

**வேட்டைக்காரன் புதூரில் :** மண்ணின் மைந்தர்களின் உரிமை முழக்கப் பரப்புரைப் பயண விளக்கப் பொதுக்கூட்டம் 26.08.2019 அன்று மாலை 6 மணிக்கு பொள்ளாச்சி வேட்டைக்காரன் புதூரில் நடைபெற்றது.

நிகழ்விற்கு ஒன்றியச் செயலாளர் அரிதாசு தலைமை வகித்தார். ஒன்றிய தலைவர் அப்பாதுரை முன்னிலை வகித்தார். நிகழ்வில் கழக பொருளாளர் துரைசாமி, செயற்குழு உறுப்பினர் மடத்துகுளம் மோகன், கோவை மாவட்ட செயலாளர் வெள்ளியங்கிரி உரையாற்றினர். முனைவர் சுந்தர வள்ளி, திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினர். தோழர்கள் வினோதினி - மணி இணையர்களின் குழந்தைக்கு நிறைமதி என கழகத் தலைவர் பெயர் சூட்டினார். சபரிகிரி நன்றி கூறினார். இந்நிகழ்வில், திருப்பூர், கோவை, பொள்ளாச்சி, ஆனமலை பகுதி தோழர்கள் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரத்தில் :** மண்ணின் மைந்தர்களின் உரிமை மீட்பு பயணத்தின் பிரச்சார பயண விளக்க பொதுக் கூட்டம் 26.08.2019 அன்று மாலை 5 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக தோழர்கள் காஞ்சிபுரம் பெரியார் நினைவுத் தூண் அருகே ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வில், தினேஷ், மாவட்ட செயலாளர் வரவேற்புரையாற்றினார், பரப்புரை பயண நோக்கத்தை விளக்கி, இரா. உமாபதி (திவிக), பாசறை அ.செல்வராஜ் (விசிக), காஞ்சி அமுதன் பாலாறு பாதுகாப்பு கூட்டியக்கம், தஞ்சை தமிழன், மக்கள் மன்றம், தாண்டவமுர்த்தி, தன்னாட்சி தமிழகம், சீதாவரம் அ.மோகன், தமிழ்நாடு விவசாயிகள் இயக்கம், ராமஜெயம், திவிக ஆகிய தோழர்கள் உரையாற்றினார்கள்.

இறுதியாக ஏழுமலை நன்றியுரை யாற்றினார். முன்னதாக விரட்டு கலைக் குழுவினர் வீதி நாடகம் நடந்தது.

**இராயக்கோட்டையில்:** மண்ணின் மைந்தர்களின் உரிமை முழக்கப் பரப்புரைப் பயண விளக்கப் பொதுக் கூட்டம் 28.08.2019 அன்று மாலை 6 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் இராயக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நடை பெற்றது. நிகழ்விற்கு கா.குமார், மாவட்ட செயலாளர் தலைமை வகித்தார். வாஞ்சிநாதன் மாவட்ட துணைச் செயலாளர், கிருட்டிணன் மாவட்டத் துணைத் தலைவர், பழநி, சங்கர் கெலமங்கலம் ஒன்றியத் தலைவர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வின் தொடக்கத்தில் மேட்டூர் டி.கே.ஆர் கலைக் குழுவின் பறை இசை, மற்றும் வீதி நாடகம் நடைபெற்றது. தமிழரசன் (தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்) உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். இறுதியாக இரமேஷ் நன்றி கூறினார்.

## ‘மகாராஷ்டிரா’ ஆட்சி அறிவிப்பு: மண்ணின் மைந்தருக்கு வேலை தந்தால் ‘ஜி.எஸ்.டி.’ கிடையாது

ஆந்திராவைத் தொடர்ந்து மகாராஷ்டிரா மாநில அரசு மண்ணின் மைந்தர்களுக்கே 80 சதவீத வேலை வாய்ப்புகளை வழங்கும் கொள்கையை உருவாக்கி இருக்கிறது. இதில் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பு மண்ணின் மைந்தர் வேலை வாய்ப்புக் கொள்கையை ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு சட்டத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாகும். 80 சதவீத வேலை வாய்ப்புகளை மண்ணின் மைந்தர்களுக்கு வழங்க மறுக்கும் தனியார் தொழிற்சாலைகள், உற்பத்தி நிறுவனங்களுக்கு அரசு அறிவித்துள்ள ஜி.எஸ்.டி. வரிச் சலுகைகள் முழுமையாக இரத்து செய்யப்படும் என்று மகாராஷ்டிரா தொழில் மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் சுபாஷ் தேசாய் கடந்த ஆக.26ஆம் தேதி அறிவித்தார். இவர் சிவசேனாக் கட்சியைச் சார்ந்தவர். மகாராஷ்டிரா மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட சிறு, குறு தொழிற்சாலைகள், உற்பத்தி நிறுவனங்கள், தொழிற் சாலைகள், எண்ணிக்கை 3.8 இலட்சம். இதில் 2.4 மில்லியன் பேர் வேலை செய்கிறார்கள்.

## தோழர் சக்திவேல் இல்ல மணவிழா : கழக ஏட்டுக்கு நன்கொடை



சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் ச. விஜய்-அம்மு, ஜாதி மறுப்பு சுயமரியாதை இணையேற்பு விழா 25.8.2019 அன்று மாலை 7 மணியளவில் சென்னை பெரும்பாக்கத்திலுள்ள சமூக நலக் கூடத்தில் நடந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மணவிழாவை நடத்தி வைத்தார். கழக ஏட்டுக்கு மணவிழா மகிழ்வாக ரூ.5000 நன்கொடை வழங்கப்பட்டது.

## எச். ராஜா கிராமத்துக்குள் நுழைய விடாமல் துரத்தப்பட்டார்

கடலூர் மாவட்டம் அரியநாச்சி எனும் கிராமத்தில் கோயிலை புதுப்பிப்பது தொடர்பாக ஒரே சமூகத்தைச் சார்ந்த இரு பிரிவினருக்கிடையே பிரச்சினை இருந்து வருகிறது. நீதிமன்றத்தில் வழக்கும் இருக்கிறது. இந்த நிலையில் பா.ஜ.க.வின் செயலாளர்களில் ஒருவரான பார்ப்பனர் எச். ராஜா ஒரு பிரிவினருக்கு ஆதரவாக அக்கிராமத்துக்குள் நுழைய முயன்றார். அப்போது அரியநாச்சி கிராம மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எச். ராஜாவை கிராமத்துக்குள்ளேயே நுழைய விடாது கருப்புக் கொடி காட்டி தடுத்தனர். ஆன்மீகத்தின் பெயரால் மக்களைப் பிளவு படுத்தும் எச். ராஜா ஒழிக என்று முழக்கமிட்டனர். கண்டன சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. வேறு வழியின்றி எச். ராஜா அவமானப்பட்டு திரும்பிப் போனார். தி.மு.க., அ.தி.மு.க.வினர் இணைந்து கண்டன சுவரொட்டிகளை ராஜாவுக்கு எதிராக ஒட்டியது குறிப்பிடத்தக்கது.

## மயிலாடுதுறை மா.க. கிருட்டிணமூர்த்தி படத்திறப்பு; நினைவு நூல் வெளியீடு





திராவிடர் விடுதலை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திராவிடர் கழகத் துணைத் தலைவர் கலி. பூங்குன்றன் ஆகியோரின் மூத்த சகோதரர் மா.க. கிருட்டிணமூர்த்தி (85) ஆகஸ்டு 19ஆம் தேதி முடிவெய்தினார். கூட்டுறவுத் துறையில் இணைப் பதிவாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற மா.க. கிருட்டிணமூர்த்தி, தீவிரமான பெரியாரிஸ்ட். தனது சகோதரர்களை பெரியார் இயக்கத்தை நோக்கிக் கொண்டு வந்தவர். அவரது விருப்பப்படி உடல் புதுச்சேரி ‘மகாத்மா காந்தி’ அரசு மருத்துவமனைக்கு கொடையாக வழங்கப்பட்டது. படத்திறப்பு நிகழ்வு ஆகஸ்டு 29 அன்று மயிலாடுதுறை வாசுகி மகாலில் மாலை 6 மணியளவில் நடந்தது. திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி படத்தைத் திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார். திராவிடர் விடுதலைக்கழகத் தோழர்களும் திராவிடர் கழகத் தோழர்களும் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்களும் நண்பர்களும் உறவினர்களும் திரளாகப் பங்கேற்றனர்.

நிகழ்வில் மா.க. கிருட்டிணமூர்த்தி மகன் கி. தளபதிராஜ் எழுதிய ‘விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவரா பெரியார்?’ என்ற நூல் வெளியிடப்பட்டது. திராவிடர் கழகத் தலைவர் வெளியிட எழுத்தாளர் மதிமாறன் நூலைப் பெற்று நூல் குறித்து திறனாய்வு செய்தார். மா.க. கிருட்டிணமூர்த்தி அவர்களைப் பற்றி அவரது நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் எழுதிய நினைவுக் குறிப்புகளின் தொகுப்பு ஒரு நூலாக வெளியிடப்பட்டது. மா.க. கிருட்டிணமூர்த்தியின் பேரன் பேத்திகள் நூலைப் பெற்றுக் கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 6th September 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN